ஆறாம் வகுப்பு- கணிதம் -ஒரு மதிப்பெண் தேர்வு

பாடம்:எண்கள்   ஆக்கம்: கோ.இளவரசு

1. 10 மில்லியனின் தொடரி

(அ) 1000001    (ஆ) 10000001

(இ) 9999999    (ஈ) 100001

2. 99999 இன் தொடரி மற்றும் முன்னியின் வேறுபாடு

(அ) 90000    (ஆ) 1

(இ) 2    (ஈ) 99001

3. 1 பில்லியனுக்குச் சமமானது

(அ) 100 கோடி    (ஆ) 100 மில்லியன்

(இ) 100 இலட்சம்    (ஈ) 10,000 இலட்சம்

4. 6,70,905 என்ற எண்ணின் விரிவான வடிவம்

(அ) $6 \times 10000 + 7 \times 1000 + 9 \times 100 + 5 \times 1$

(ஆ) $6 \times 10000 + 7 \times 1000 + 0 \times 100 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

(இ) $6 \times 1000000 + 7 \times 10000 + 0 \times 1000 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

(ஈ) $6 \times 100000 + 7 \times 10000 + 0 \times 1000 + 9 \times 100 + 0 \times 10 + 5 \times 1$

5. பட்டியலில் எந்த எண் வரிசை சிறியதிலிருந்து பெரியதாக வரிசைப்படுத்தப்பட்டு உள்ளது?

(அ) 1468, 1486, 1484    (ஆ) 2345, 2435, 2235

(இ) 134205, 134208, 154203    (ஈ) 383553, 383548, 383642

6. அரபிக் கடலின் பரப்பளவு 1491000 சதுர மைல்கள். இது எந்த இரு எண்களுக்கு இடையில் அமைந்துள்ளது?

(அ) 1489000 மற்றும் 1492540    (ஆ) 1489000 மற்றும் 1490540

(இ) 1490000 மற்றும் 1490100    (ஈ) 1480000 மற்றும் 1490000

7. இந்திய நாளிதழ் படிப்பவர்கள் கணக்கீட்டின்படி, 2018இல் விற்ற நாளிதழ்களின் எண்ணிக்கையைக் காட்டும் அட்டவணை கீழேக் கொடுக்கப்பட்டுள்ளது. அட்டவணையில் விடுபட்ட எண் என்னவாக இருக்கும்?

| நாளிதழின் பெயர் | தரம் | விற்பனை (இலட்சத்தில்) |
|---|---|---|
| A | 1 | 70 |
| B | 2 | 50 |
| C | 3 | ? |
| D | 4 | 10 |

(அ) 8    (ஆ) 52    (இ) 77    (ஈ) 26

LIVEWORKSHEETS

8. $3 + 5 - 7 \times 1$ இன் மதிப்பு ________.

(அ) 5 (ஆ) 7 (இ) 8 (ஈ) 1

9. $24 \div \{8 - (3 \times 2)\}$ இன் மதிப்பு ________.

(அ) 0 (ஆ) 12 (இ) 3 (ஈ) 4

10. BIDMAS ஐப் பயன்படுத்திச், சரியான குறியீட்டைக் கட்டத்தில் நிரப்புக..

$2 \; \square \; 6 - 12 \div (4 + 2) = 10$

(அ) + (ஆ) − (இ) × (ஈ) ÷

11. ஓர் எண்ணை ஆயிரங்களில் முழுமையாக்கினால் கிடைப்பது 11000 எனில் அந்த எண்

(அ) 10345 (ஆ) 10855 (இ) 11799 (ஈ) 10056

12. 76812 இன் அருகிலுள்ள நூறுகளின் உத்தேச மதிப்பு

(அ) 77000 (ஆ) 76000 (இ) 76800 (ஈ) 76900

13. 9785764 இன் அருகிலுள்ள இலட்சத்தின் உத்தேச மதிப்பு

(அ) 9800000 (ஆ) 9786000 (இ) 9795600 (ஈ) 9795000

14. 167826 மற்றும் 2765 ஆகியவற்றின் கழித்தலை அருகிலுள்ள ஆயிரங்களுக்கு முழுமையாக்கக் கிடைக்கும் உத்தேச மதிப்பு

(அ) 180000 (ஆ) 165000 (இ) 140000 (ஈ) 155000

15. ஒரு பூச்சியமற்ற முழு எண் மற்றும் அதனுடைய தொடரியின் பெருக்குத் தொகை எப்போதும்

(அ) ஓர் இரட்டை எண் (ஆ) ஓர் ஒற்றை எண்

(இ) பூச்சியம் (ஈ) இவற்றுள் ஏதுமில்லை

16. முன்னி இல்லாத ஒரு முழு எண்

(அ) 10 (ஆ) 0 (இ) 1 (ஈ) இவற்றுள் ஏதுமில்லை

17. பின்வரும் கோவைகளில் எது பூச்சியமல்ல?

(அ) $0 \times 0$ (ஆ) $0 + 0$ (இ) $2 / 0$ (ஈ) $0 / 2$

18. பின்வருவனவற்றுள் எது உண்மை அல்ல?

(அ) $(4237 + 5498) + 3439 = 4237 + (5498 + 3439)$

(ஆ) $(4237 \times 5498) \times 3439 = 4237 \times (5498 \times 3439)$

(இ) $4237 + 5498 \times 3439 = (4237 + 5498) \times 3439$

(ஈ) $4237 \times (5498 + 3439) = (4237 \times 5498) + (4237 \times 3439)$

19. $(53 + 49) \times 0$ என்பது

(அ) 102 (ஆ) 0 (இ) 1 (ஈ) $53 + 49 \times 0$

20. $\frac{59}{1}$ என்பது

(அ) 1 (ஆ) 0 (இ) $\frac{1}{59}$ (ஈ) 59

LIVEWORKSHEETS